*1967/68, 1968/69 காலப்பகுதிகளில் இக்கூட்டுத்தாபனம் இலாபத்தினைப் பெற்றுவந்துபோதிலும், 1969/70ஆம் ஆண்டுகளில் 20 இலட்சம் ரூபா நட்டமடைந்தது. 1967, நவெம்பரில் ரூபா நாணய மதிப்பிறக்கத்தின் பின்பு, கால்நடைக் கைத்தொழிலுக்கு உதவுவதற்காகக் கால்நடை உணவுகளின் விலையினை நாணய மதிப்பிறக்கத்தின் முன்பிருந்த விலைகளிலேயே தொடர்ந்தும் வைத்துப்பாதுகாக்கும்படி இக் கூட்டுத்தாபனத்தினை அரசாங்கம் கேட்டுக் கொண்டது. இதன் விளைவாக ஏற்பட்ட நட்டம் அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட நன்கொடையினுல் ஈடுசெய்யப்பட்டது. இந்நன்கொடை இக் கூட்டுத்தாபனத்தின் முன்னைய ஆண்டுகளிற் கிடைந்த இலாபத்தினைக் கணக்கிடும்போது இதுவும் அதனுள் அடக்கப்பட்டது. 1969/70ஆம் ஆண்டிலிருந்து இந்நன்கொடைகள் இலாபத்தின் கணக்கிற் சேர்க்கப்படாததனுல், இதுவே 1969/70ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குவதற்கு முக்கிய காரணமாயமைந்திருக்கும்.*

*இக்கூட்டுத்தாபனம் கொழுப்பு, அமிலங்கள், கிளிசறின் ஆகியவற்றின் ஏற்றுமதிகள் மூலம் தொடர்ந்து வெளிநாட்டுச் செலாவணியினைச் சம்பாதித்து வந்தது. 1969/70ஆம் ஆண்டுகளில் 876 தொன் கொழுப்பு அமிலங்கள் ஏற்றுமதி செய்ததினுல் 16 இலட்சம் ரூபாய்கள் வெளிநாட்டுச் செலாவணியாக கிடைத்திருக்க, 149.5 தொன் கிளிசறினிஞல் கிடைத்த வருமானம் 2,53,200 ரூபாய்களாகும்.*

*(இ) இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம்*

*1969/70ஆம் ஆண்டுகளில் இக்கூட்டுத்தாபனத்தின் மூலதன முதலீடு 60 இலட்சம் ரூபாய்களினுல் 871 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பு கந்தளாய் தொழிற்சாலையில் 50 இலட்சம் ரூபாய்களாகவும், கல்லோயா தொழிற்சாலையில் 10 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தது. 1968/69ஆம் ஆண்டுகளில் 144 இலட்சம் ரூபாய்களாக இருந்த வெளியீட்டளவின் பெறுமதி 1969/70ஆம் ஆண்டுகளில் 247 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது.*

*கந்தளாய் தொழிற்சாலையின் வெளியீட்டளவும், விற்கப்பட்ட சீனியின் அளவும் 1969/70 காலப்பகுதிகளில் 1,825 தொன்களினுல், 5,478 தொன்களாக அதிகரித்தன. திராவகங்களின் வெளியீடு 8,32,000 இலிருந்து 7,68,000 சிறப்புக் கலன்களாகவும், விற்பனைகள் 7,95,000 இலிருந்து 7,70,000 சிறப்புக் கலன்களாகவும் வீழ்ச்சியடைந்தன. 1969/70 ஆம் ஆண்டுகளில் விற்கப்பட்ட சீனியினதும், திராவகங்களினதும் பெறுமதி 167 இலட்சம் ரூபாய்களி*

லிருந்து 159 இலட்சம் ரூபாய்களாக வீழ்ச்சியடைந்தது. கந்தளாய்த் தொழிற் சாலையில் 1968/69 ஆம் ஆண்டுகளில் 84 இலட்சம் ரூபாய்களாக இருந்த மொத்த இலாபம் 1969/70இல் 72 இலட்சம் ரூபாய்களாக வீழ்ச்சியடைந்தது.

கல்லோயாத் தொழிற்சாலையில் 1968/69ஆம் ஆண்டுகளில் 4,700 தொன்களாக இருந்த சீனி வெளியீட்டளவு, 1969/70ஆம் ஆண்டுகளில் 3,700 தொன்களாக வீழ்ச்சியடைந்தது. மறுபக்கத்தில் திராவகங்களுடைய உற்பத்தி 4,73,000 இலிருந்து 6,73,000 கலன்களாகவும், இவற்றின் விற்பனையளவு 3,17,000 இலிருந்து 6,36,000 கலன்களாகவும் அதிகரித்தன. 1969/70ஆம் ஆண்டுகளில் உற்பத்திசெய்யப்பட்ட திராவகங்களின் பெறுமதி 86 இலட்சம் ரூபாய்களிலிருந்து 122 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது.

1969/70ஆம் ஆண்டுகளில் இக்கூட்டுத்தாபனம் முன்னைய காலப் பகுதிகளைப் போன்று சீனியினுல் கிடைத்த நட்டத்தினை, திராவகங்களிலிருந்து கிடைத்த வருமானத்தினுல் ஈடுசெய்யமுடிந்தது. 1969/70இல் இக்கூட்டுத்தாபனத்துக்குக் கிடைத்த மொத்த இலாபம் 111 இலட்சம் ரூபாய்களாகும்.

மிகத் தொடக்க காலங்களிலிருந்து இலங்கையின் சீனிக் கைத்தொழில் பிழையான திட்டமிடலாலும், பொருத்தமற்ற முகாமையாலும் ஏற்பட்ட கடினமான நிலைமைகளை எதிர்நோக்கியது. சீனி தயாரிக்கக் கூடிய அதிகளவு கருப்பஞ் சாறும், அதிகளவு கரும்பும் கிடைத்தாலன்றிச் சீனித் தயாரிப்பிலிருந்து அதிக இலாபத்தினைப் பெறமுடியாது. ஆனுல் கூட்டுத்தாபனத்துக்கு அதிக வருவாயை அளிக்கக்கூடிய திராவகத்தின் உற்பத்தி சீனியிலிருந்து கிடைத்த நட்டத்தைக் குறைப்பதற்கு உதவியது.

(ஈ) அரசாங்க மாவரைத்தல் கூட்டுத்தாபனம்

1969/70ஆம் ஆண்டுகளில் மொத்த மூலதன முதலீடு 76 இலட்சம் ரூபாய்களினுல், 329 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. 1968/69இல் 11,031 தொன்களாக இருந்த கோதுமை மா உற்பத்தி 1969/70இல் 56,991 தொன்களாகக் குறிப்பிட்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்து. இருந்த போதும், ஓராண்டுக்கான மிகக் கூடியளவு உற்பத்தித் திறனுகிய 70 000 தொன்களிலும் பார்க்க இவ்வுற்பத்தி குறைவானதே 1969/70இல் இக்கூட்டுத்தாபனம் 9,34,000 ரூபாய்களை இலாபமாகப் பெற்றது.

(உ) தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்

1969/70ஆம் ஆண்டில் உப்பின் மொத்த உற்பத்தி சென்ற ஆண்டிலும் பார்க்க 11,900 தொன்களினுல் அல்லது 11 சதவீதத்தினுல் அதிகரித்தது. இதன் இலாபம் 43 சதவீதத்தினுல், 1968/69ஆம் ஆண்டில் 19 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1969/70இல் 28 இலட்சம் ரூபாய்களாக அதிகரித்தது. இவ்வாறு உற்பத்தியிலும் இலாபத்திலும் ஏற்பட்ட இவ்வதிகரிப்புக்கு, சாதகமான காலநிலைமைகளும், 1968/69இல் 130 இலட்சம் ரூபாய்களாக இருந்த முதலீடு 1969/70இல் 154 இலட்சம் ரூபாய்களாக 12 சதவீதம் அதிகரித்தமையுமே காரணிகளாகும். கடந்த ஈராண்டுகளாக விற்கப்படாதிருந்த மிகப் பெரியளவு கையிருப்பினை இக்கூட்டுத்தாபனம் 1970/71 ஆண்டுகளில் விற்பதற்குத் திட்டமிட்டிருந்தும், அதிகரித்த இலாபத்தினைப் பெற்றது.

**(ஆ) புடவை வகைகள், அணியும் ஆடைகள், தோற்பொருட் கைத்தொழில்கள்**

*(அ)* தேசிய புடவைக் கூட்டுத்தாபனம்

இக்கூட்டுத்தாபனத்தின் மொத்த மூலதன முதலீடு 1968/69இல் 983 இலட்சம் ரூபாய்களாக இருந்து 1969/70ஆம் ஆண்டில் 2,518 இலட்சம் ரூபாய்களாக 1,540 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. இவ்வதிகரித்த முதலீட்டில் 1,520 இலட்சம் ரூபாய்கள், இன்னும் முடிவுபெரு நிலையிலி

ருக்கும் துல்கிரிய புதிய புடவை ஆலேயின்மீது செலவிடப்பட்டுள்ளது. வியாங்கொடைப் புடவை ஆலேயில் கடந்த சில ஆண்டுகளாக மேலதிக முதலீடுகள் இல்லாதவிடத்தும், நூல், புடவைகள் ஆகியவற்றின் உற்பத்தி குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருப்பதுடன், இவ்வியந்திரப் பொறியின் மூலதன வெளியீட்டு விகிதமானது 1968/69ஆம் ஆண்டில் 2ஆக இருந்தது. 1969/70இல் 1·4 ஆக முன்னேற்றமடைந்துள்ளது.

1968/69இல் கூட்டுத்தாபனம் பெற்ற 27 இலட்சம் ரூபா இலாபத்துக்கு எதிரான 1969/70ஆம் ஆண்டில் 35 இலட்சம் ரூபா இலாபத்தினைப் பெற்றது. இவற்றுள் 13 இலட்சம் ரூபாய், இதனுடைய வர்த்தகத் தொழிலின் மூலம் பெறப்பட்டதாகும்.

மின்னேரியாவிலும், அம்பலாங்கொடையிலும் ஆலேகளை நிறுவுவதற்குக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது. முன்பு பூகொடையில் தொடங்கி நிறுத்தி வைக்கப்பட்ட புடவை ஆலே நிர்மாண வேலேகள் திரும்பவும் தொடக்கப்பட்டுள்ளது. பருத்தி உற்பத்தியிலும் கூட்டுத்தாபனம் தொடர்ந்து ஈடுபட்டிருந்த போதிலும், இந்நடவடிக்கைகள் மீதான தரவுகள் கிடைக்கவில்லே.

(ஆ) இலங்கைத் தோற்பொருட் கூட்டுத்தாபனம்

1968/69ஆம் ஆண்டுகளில் 71இலட்சம் ரூபாய்களாக இருந்த கூட்டுத்தாபனத்தின் மொத்த முதலீடு 1969/70இல் 48 சதவீதத்தினுல் 105 இலட்சம் ரூபாய்களாக அதிகரித்தது. 1969/70இல் சப்பாத்துக்களின் வெளியீட்டளவு 2,75,000 சோடிகளிலிருந்து 2,81,000 சோடிகளாகவும், குருமத் தோலின் வெளியீட்டளவு 6,67,000 சதுரஅடியிலிருந்து 6,88.000 சதுர அடிகளாகவும் அதிகரித்திருக்க, பட்டைத் தோலினதும் ஏனைய தோல்களினதும் வெளியீட்டளவு 3,64,000 இருத்தல்களிலிருந்து 3,58,000இருத்தல்களாக வீழ்ச்சியுற்றது.

கூட்டுத்தாபனம் தொடர்ந்து தனியார் துறையின் போட்டியினை எதிர்நோக்க வேண்டியிருந்ததனல் 1968/69இல் 2,53,000 சோடிகளாக இருந்த விற்பனைகள் 1969/70இல் 2,29,000 சோடிகளாக வீழ்ச்சியுற்றது. 1969/70 காலப்பகுதியிற் பல்வகைப் பொருட்களின் விற்பனையினுற் கிடைக்கப்பெற்ற வருமானம் 4,52,000 ரூபாய்களிலிருந்து ரூ. 5 71,000 ரூபாய்களாக அதிகரித்த போதும் எல்லா உற்பத்திகளினதும் விற்பனவுப் பெறுமதி 1968/69இல் 69,75 000 ரூபாய்களாகவிருந்து 1969/70இல் 62,79,000 ரூபாய்களாக வீழ்ச்சியுற்றது. 1968/69இல் கூட்டுத்தாபனம் ரூ. 1,68,000 இனை இலாபமாகப் பெற்றிருக்க, 1669/70இல் 2.21,000 ரூபாய்கள் கொண்ட நட்டத்தினை அடைந்தது.

**(இ) தாள், தாள் உற்பத்திகள், அச்சடித்தல், வெளியிடல்**

(அ) கீழைத் தாள் ஆலேக் கூட்டுத்தாபனம்

1969/70ஆம் ஆண்டுகளில் மொத்த மூலதன முதலீடு சென்ருண்டிலிருந்து சிறிதளவு அதிகரித்து வந்துள்ளது. 1968/69இல் வாழைச்சேனைத் தொழிற்சாலேயின் தாள் உற்பத்தி வீழ்ச்சியடைந்திருக்க, 1969/70இல் இவ்வுற்பத்தி அதிகரித்தது. தாள் இறக்குமதிகள், இறக்குமதி நிறுத்தப்பட்டமையினுலும், மேலதிக இருப்புக்கள் கிடைக்கப்பெற்றமையினுலும், 1966/67ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி வீழ்ச்சியடைந்துகொண்டுவந்து 1969/70இல் மேலும் வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

கூட்டுத்தாபனத்தின் இலாபம், 1968/69இல் 84 இலட்சம் ரூபாய்களாக இருந்து 1969/70இல் 42 இலட்சம் ரூபாய்களாக ஒரு கடுமையான வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

(ஆ) அரசாங்க அச்சுத் தொழிற் கூட்டுத்தாபனம்

அரசாங்கத்தினுடைய அதிகரித்துவரும் அச்சுத் தொழில் தேவைகளை நிறைவுசெய்வதற்காகவே அரசாங்க அச்சுத் தொழிற் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. 1969/70ஆம் ஆண்டில் மொத்த மூலதன முதலீடு 36 இலட்சம் ரூபாய்களாகவும், இம் முதலீடு 1970/71ஆம் ஆண்டில் 62 இலட்சம் ரூபாய்களாகவும் அதிகரிக்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1970 மாச்சு 31ஆந் திகதி முடிவில்எந்திர அமைப்பு முற்றுப்பெறுமையினல் கூட்டுத்தாபனம் எவ்வித அச்சுத்தொழிலினையும் மேற்கொள்ளவில்லை.

(ஈ) மரமும், மரப் பொருட்களும்

(அ) இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம்

இக்கூட்டுத்தாபனத்தின் 1969/70இற்கான மொத்த உற்பத்தி சென்ருண்டின் உற்பத்தியிலும் பார்க்கக் குறைவாகவே இருந்தது. 1968/69இல் 74 இலட்சம் ரூபாய்களாக இருந்த உற்பத்திப் பெறுமதி, 1969/70இல் 56 இலட்சம் ரூபாய்களாக வீழ்ச்சியுற்றது இவ்வீழ்ச்சியின் பயனுக. இலாபமும் அதே காலப் பகுதிகளில் 19 இலட்சம் ரூபாய்களிலிருந்து 6 இலட்சம் ரூபாய்களாக வீழ்ச்சியடைந்தது. இருந்தபோதும், கூட்டுத்தாபனத்தின் மொத்த மூலதன முதலீடு 1968/69ஆம் ஆண்டில் 123 இலட்சம் ரூபாய்களாக இருந்து, 1969/70 ஆம் ஆண்டில் 761 இலட்சம் ரூபாய்களாக அதிகரித்தது இம் முதலீட்டு அதிகரிப்பு அவிசாவலையில் இன்னும் நிறைவுபெருநிலையிலிருக்கும் மரத் தயாரிப்புத் தொழிற்சாலையின் மீது 1969/70ஆம் ஆண்டில் முதலிடப்பட்டதனுல் ஏற்பட்டதாகும்.

கூட்டுத்தாபனம் தனது பலகை ஒட்டுதலையும், முதிரை, மகோகனி கிரிகம்பிலியா, குலன்சிக் ஆகிய ஆடம்பர மரப்பொருட்கள் கொண்டும், ஏற்றுமதிச் சந்தையினைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளிலீடுபட்டு வருகின்றது. 1969/70 நிதியாண்டின்போது ஏற்றுமதிசெய்யப்பட்ட பலகை ஒட்டினதும், ஒட்டுப்பலகையினதும் பெறுமதி 2,01,000 ரூபாய்களாகும். 1970, ஏப்பிரலுக்கும் செத்தெம்பருக்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளில் ஒட்டுப்பலகை ஏற்றுமதியாற் கிடைத்த பெறுமதி ரூ. 3,79,000 ஆகும். கூட்டுத்தாபனத்தின் இவ்விலாபத்தினைத் தவிர்த்து, 1969/70ஆம் ஆண்டில் 20 இலட்சம் ரூபாய் கொண்ட மதிப்பீட்டு மிகையினுல் வீழ்ச்சியடைந்தது.

(ஆ) அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

1968ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், மரங்கள் பிடுங்குதல், மரமரிதல், மரவிற்பனையையும், வீதிகள் அமைப்பதனையும், மரங்கள் பிடுங்குவதனை இலகுப்படுத்துவதற்காக எந்திரத் தொகுதிகளை உருவாக்குவதனையும் கையேற்றுள்ளது. வனப் பாதுகாப்பாளரினல் தனியார் ஒப்பந்தக்காரர்களுடன்செய்யப்பட்டிருந்த மரம்பிடுங்குதற்காகச் செய்யப்பட்டிருந்த ஒப்பந்தங்களை வனபரிபாலனத் திணைக்களத்திடமிருந்து இக்கூட்டுத்தானம் கையேற்றதுடன், வனபரிபாலனத் திணைக்களத்தினுல் பயன்படுத்தப்பட்ட மரம் பிடுங்குதல், மரமரியும் ஆலைகள், பருவமடைந்த மரங்கள் பதப்படுத்தும் ஆலைகள், மர விற்பனை ஆலைகள் ஆகிய எல்லாச் சாதனங்களையும் கூட்டுத்தாபனம் கையேற்றது. 1969/70ஆம் ஆண்டுக்கான உண்மையான செயலாக்கத் தரவுகளும், 1970/71இற்கான மதிப்பீட்டுப் புள்ளிவிவரங்களும் கிடைக்கப்பெறவில்லை.

## (உ) இரசாயன, பெற்றோலிய, இரப்பர், பிளாத்திக்குப் பொருட்கள்

### (அ) பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்

1969/70ஆம் ஆண்டில் எரிசோடா, குளோறின் ஆகியவற்றின் உற்பத்தி 1968/69ஆம் ஆண்டு உற்பத்தியிலும் பார்க்கக் குறைந்தளவாயும், எதிர் நோக்கிய இறக்குமதிகளிலும் குறைவாகவும் இருக்க, கறி உப்பின் உற்பத்தி 1968/69ஆம் ஆண்டிலும் பார்க்க அதிகரித்தது. கூட்டுத்தாபனம் தொடர்ந்து எரிசோடாவினை இறக்குமதி செய்தது. தயாரிப்புத் தொழிலில் கூட்டுத்தாபனம் 1968/69ஆம் ஆண்டில்பெற்ற 6 இலட்சம் ரூபா நட்டத்திற்கு எதிராக 1969/70ஆம் ஆண்டுகளில் 3 இலட்சம் ரூபா கொண்ட நட்டத்தினையே அடைந்திருக்க, வர்த்தகத் தொழிலில் முக்கியமாக எரிசோடா இறக்குமதி களினால் இலாபங்கள் ரூ. 9,58,000 இலிருந்து, ரூ 12,31,000 ஆக அதி கரித்தது. இதன் விளைவாகக், கூட்டுத்தாபனம் தனது மொத்த இலாபத்தினை 1968/69இல் ரூ. 3,36,000 ஆக இருந்ததிலும் பார்க்க 1969/70இல் ரூ. 9 06,000 ஆக அதிகரித்துக்கொண்டது.

கூட்டுத்தாபனத்தில் மொத்த மூலதன முதலீடானது சென்றாண்டினைப் போன்று அதே அளவான 118 இலட்சம் ரூபாய்களிலேயே 1969/70இலும் இருந்தது.

### (ஆ) இலங்கை ரயர் கூட்டுத்தாபனம்

இக்கூட்டுத்தாபனத்தின் மூலதன முதலீடு சென்ற சில ஆண்டுகளாக 675 இலட்சம் ரூபாய்களாகவே இருந்தது. ரயர், ரியூப்புக்களது உற்பத்தி 1969/70ஆம் ஆண்டுகளில், மதிப்பீட்டு இலக்குகளிலும் பார்க்கப் பாரதூர மானளவு வீழ்ச்சியடைந்தது. 6 அளவுகளைக் கொண்ட ரயர்கள் மட்டுமே செய்து, உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டமையால், தொழிற்றிறனின்பயன் மிகவும் குறைவாகவே இருந்தது. ஏற்றுமதிச் சந்தையினைத் தேடாது, இப்படிக் குறிப்பிட்ட அளவுகளில் உள்நாட்டுக் கேள்வியினைத் திருப்திப்படுத்துவதற்கு உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டால், தொழிற்றிறன் உபயோகமானது தொடர்ந் தும் இப்படியே இருக்கும். ரியூப்புக்களைப் பொறுத்தமட்டில், தற்போது இருப் பிலுள்ள ரியூப்புக்களை நீண்ட காலத்துக்கு இருப்பில் வைத்திருக்க முடியா ததால் உற்பத்தியளவு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. உற்பத்தித்திணைக்களத் தில், இணைக்கும் இயக்குநர்கள் போன்ற தனிப்பட்ட, பயிற்றப்பட்ட திறமை யாளர்கள் கிடைக்காமையும் குறைவான தொழிற்றிறன் பிரயோகத்துக்குக் காரணமாக அமைந்தது.

1969/70 காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் எந்த உற்பத்திப் பொருளை யாவது ஏற்றுமதி செய்யமுடியவில்லை. 1968/69இல் ரூ. 37 இலட்சமாக இருந்த கூட்டுத்தாபனத்தின் இலாபம் 1969/70இல் ரூ. 33 இலட்சமாகச் சிறிதளவினால் வீழ்ச்சியுற்றது.

### (இ) இலங்கை உரக் கூட்டுத்தாபனம்

1969/70ஆம் ஆண்டின் மூலதன முதலீடானது ரூ 209 இலட்சத்திலிருந்து ரூ. 276 இலட்சமாக அதிகரித்தது. கூட்டுத்தாபனம் 1969இல் சென்ற ஆண்டி லும் பார்க்கக் குறைவான உரமே இறக்குமதி செய்திருந்த போதிலும், விவ சாய அமைச்சினால் உயர்ந்த இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டமையினால் 1970/71 ஆம் ஆண்டுகளில் இறக்குமதியினை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலாபம் 1968/69இல் ரூ. 159 இலட்சத்திலிருந்து 1969/70இல் ரூ. 37 இலட்சமாக வீழ்ச்சியடைந்தது.

(ஈ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் —

1. எண்ணெய் தூய்மைப்படுத்தும் நிலையம்

1969/70ஆம் ஆண்டின் தூய்மைப்படுத்தும் நிலையத்தின் மொத்த செலவீடானது ரூ. 770 இட்சத்திலிருந்து ரூ. 1,800 இலட்சமாக அதிகரித்திருக்க, அதேபகுதியில் அதன் உற்பத்தியும் ரூ. 1,177 இலட்சத்திலிருந்து ரூ. 1,754 இலட்சமாக அதிகரித்தது. எப்படியிருந்தும் தூய்மைப்படுத்தும் நிலையத்தின் நடவடிக்கைகளினலேற்பற்பட்ட நட்டமோ இலாபமோ தொடர்பான எதுவித புள்ளிவிவரங்களும் கிடைக்கவில்லை.

1970ஆம் ஆண்டில் 230 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டுச் செலாவணி தூய்மைப்படுத்தப்பட்ட பொருட்களான நாப்தா எரிபொருள் எண்ணெய், கப்பல் எரிபொருட்கள் ஆகிவற்றின் ஏற்றுமதிகளினுல் கிடைத்தது. 1971இல் இவ்வேற்றுமதிப் பெறுமதி ஏறக்குறைய390 இலட்சம் ரூபாய்களாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தூய்மைப்படுத்தும் நிலையம், இலங்கையின் முழுப் பெற்றோலியத் தேவைகளையும் நிறைவுசெய்யக்கூடியதாக இருந்ததோடு, 1970இல் திரவப் பெற்றோலிய வாயுவினையும் (தி. பொ. வா) உற்பத்தி செய்யத் தொடங்கியது

2. உராய்வுநீங்கிய எண்ணெய்க் கலவைப் பொறி

எண்ணெய்யைத் தூய்மையாக்கும் கலவைப் பொறியினை நிறுவுவதற்கு முன்பு, இம் மசகு எண்ணெயை வெளிநாட்டு மூலங்களிலிருந்து கூடிய அடைத்தல் செலவினையும், வெவ்வேறுபட்ட கப்பற் கட்டணங்களையும் கொடுத்து இறக்குமதிசெய்ய வேண்டியிருந்தது 1968/69ஆம் ஆண்டில் இப் பொறியில் இடப்பட்ட மொத்த முதலீடு ரூ. 46 இலட்சமாக இருக்க, 1969/70இல் 60 இலட்சம் ரூபாய்களாக உயர்ந்தது.

40,32,000 கலன்கள் தொழிற்றிறனைக் கொண்ட இக்கலவைப் பொறி 1969/70 இல் 38,43,000 கலன்களை உற்பத்திசெய்து ரூ. 31 இலட்சம் இலாபத்தினைப் பெற்றது.

(உ) இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்

1969ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இக்கூட்டுத்தாபனம், தேசிய சிறுகைத் தொழிற் கூட்டுத்தாபனத்தின் ஆயுள்வேத மருந்துகள் தயாரித்தல் பகுதியின் நடவடிக்கைகளை 1969 யூலையில் கையேற்று, ஆயுள்வேத, சித்த, யூனனி மருந்துகளைத் தயாரிப்பதிலும், இறக்குமதிசெய்து விற்பனைசெய்து வருவதோடு ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றது.

1969/70இல் மூலதன முதலீடு 14 இலட்சம் ரூபாயாகவும், அதே ஆண்டில் உற்பத்திப் பெறுமதி 11 இலட்சம் ரூபாயாகவும் இருந்தது. 1969/70இல் கூட்டுத்தாபனம் 1,36,000 ரூபா கொண்ட இலாபத்தினைச் சம்பாதித்தது.

(ஊ) இலங்கை அரசாங்க உரம் தயாரித்தற் கூட்டுத்தாபனம்

1966இல் நிறுவப்பட்ட இக்கூட்டுத்தாபனம், ஆண்டொன்றுக்கு 2.85,000 தொன்கள் உற்பத்தித் திறன் கொண்ட யூறியாத் தொழிற்சாலையொன்றினை நிறுவுவதற்கு எண்ணியுள்ளது. 1969/70ஆம் ஆண்டின் இறுதியில் தொடக்க வேலைகளின் மொத்தச் செலவு ரூ. 49 இலட்சமாகும். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் தூய்மைப்படுத்தலிருந்து பெறப்படும் நாப்தாவை உரம் தயாரித்தலுக்கு உபயோகிப்பதற்கு இக்கூட்டுத்தாபனம் எணணியுள்ளது. இப்பொறி 1975இல் நிறுவப்பட இருக்கிறது.

**(ஊ) பெற்றோலியப் பொருட்கள் தவிர்ந்த உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்தி**

(அ) இலங்கை மட்பாண்டக்கூட்டுத்தாபனம்

கடந்த மூன்றுண்டுகளாக இக்கூட்டுத்தாபனத்தின் மொத்த மூலதன முதலீடானது 2,003 இலட்சம் ரூபாய்களாகவே இருந்து வருகின்றது. 1968/69ஆம் ஆண்டில் 88 இலட்சம் ரூபாவாகவிருந்த உற்பத்திப் பெறுமதி, 1969/70இல் 82 இலட்சம் ரூபாய்களாகச் சிறிதளவு வீழ்ச்சியடைந்திருக்க, இலாபம் ரூ. 43 இலட்சத்திலிருந்து ரூ. 34 இலட்சமாக வீழ்ச்சியடைந்தது.

கூட்டுத்தாபனத்தின் நலத்துறைப் பொருட்களின் வெளியீட்டளவு எதிர்பார்த்த இலக்குகளிலும் 15 சதவீதத்திஞல் அதிகரித்திருக்க, இந்நடவடிக்கைகளினுலேற்பட்ட இலாபம், உள்ள இலக்குகளிலும் 63 சதவீதத்திஞல் அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பும், கூடிய மூலவள உபயோகமுமே காரணங்களாகும் கேள்வி அடிப்படையில், கூடியவிலைகளில் டெடியாவெல களிமண்ணைக் கொள்வனவு செய்ததிஞல் கயோலினிலிருந்து கிடைத்த இலாபம் மதிப்பீட்டுத்தொகைகளிலும்பார்க்க குறைவாக இருந்தது.

(ஆ) இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம்

1969/70ஆம் ஆண்டில் இக்கூட்டுத்தாபனத்தின் மொத்த மூலதன முதலீடு ரூ. 223 இலட்சத்திஞல் ரூ. 1,862 இலட்சமாக அதிகரித்தது. இம்முதலீட்டின் முழுமையான அதிகரிப்பு காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையிலேயே ஏற்பட்டது. காங்கேசந்துறை, காலி ஆகிய இடங்களின் இரண்டு பொறிகளினுலும் கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனவு 1968/69இல் 2,68,336 தொன்களிலிருந்து, 1969/70இல் 2,40,632 தொன்களாக அதிகரித்தது. 1969/70இல் காங்கேசந்துறைத் தொழிற்சாலையின் சீமெந்து, கிளிங்கர் ஆகிய வற்றின் வெளியீட்டளவு முறையே 1,88,221, 2,44,096 தொன்களாகவும் இருந்தது. காலித் தொழிற்சாலைச் சீமெந்தின் மொத்த விற்பனவு 80,115 தொன்களாகும். 1968/69ஆம் ஆண்டில் 132 இலட்சம் ரூபாய்களாக இருந்த கூட்டுத்தாபனத்தின் இலாபம் 1969/70இல் ரூ. 274 இலட்சமாகி, 100 சதவீத இலாபத்தினைப் பதிவுசெய்திருந்துங்கூட விற்பனையில் 40 சதவீத அதிகரிப்பே ஏற்பட்டிருந்தது. காலித் தொழிற்சாலையில் மட்டும் 1968/69இல் 9 இலட்சம் ரூபாவாக இருந்த இலாபம் 1969/70இல் 58 இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

(இ) தேசிய சிறு கைத்தொழிற் கூட்டுத்தாபனம்

1969/70ஆம் ஆண்டு இக்கூட்டுத்தாபனத்தின் மொத்த மூலதன முதலீடு சென்ற ஆண்டிலும் பார்க்க ரூ 55 இலட்சத்தினை மேலதிக அதிகரிப்பினைக் கொண்ட ரூ. 224 இலட்சமாகும். இவ்வதிகரிப்பு செங்கட்டி, ஓட்டுத் தொழிற்சாலையின் மீது செய்யப்பட்ட மேலதிக முதலீட்டினைப் பிரதிபலிக்கின்றது. 1968/69ஆம் ஆண்டில் ரூ. 82 இலட்சமாகவிருந்த மொத்த உற்பத்திப்பெறுமதி (ஆயுள்வேத மருந்துகள் உட்பட) 1969/70இல் ரூ.79 இலட்சமாக வீழ்ச்சியடைந்ததாலும், விற்பனைகளின் பெறுமதி மாற்றமுருது 77 இலட்சம் ரூபாவாகவே இருந்தது. 1968/69ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 1969/70இல் கூட்டுத்தாபனத்தின் ஓடுகளின் வெளியீடு 4,97,338 இஞல் அதிகரித்தும், செங்கட்டிகளது வெளியீடு 5,18,016 இஞல் வீழ்ச்சியடைந்தும், ஏனைய களிமண் உற்பத்திகள் 4,61,292 இஞல் அதிகரித்தும் காணப்பட்டன.

கடந்த பத்தாண்டு காலமாக அரசாங்கத் திணைக்களங்களுக்கிடையிலான விற்பனைகளின் மீதான போலி விலைகளிஞல் தச்சு வேலைப்பகுதி மீண்டெழும் நட்டத்தினை அனுபவித்துவருகின்றது. கிராம அபிவிருத்தி, சிறுகைத்தொழில் திணைக்களத்திஞற் கொடுக்கப்பட்ட கொள்விலையிலும் குறைவான விலைகளை

அடிப்படையாகக் கொண்ட, திறைசேரி விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக் கப்படும் விலைகளில் அரசாங்கத் திணைக்களங்களுக்குத் தரமான தளபாடங்கள் வழங்கப்படுகின்றது. 1968/69ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தின் தச்சு வேலைப் பகுதியினரால் தயாரிக்கப்பட்ட தளபாடங்களிலிருந்து பெற்ற வருமானம் வீழ்ச்சியடைந்திருக்க, 1969/70இல் இந்நடவடிக்கைகளினால் நட்டம் அதிகரித்தபோதும், ஒரு முன்னேற்றத்தினைக் காட்டுகிறது.

கடந்த சில ஆண்டுகளாகப் பெரு நட்டங்களை அனுபவித்து வரும் இக் கூட்டுத்தாபனம் 1969/70இல், சென்றாண்டின் நட்டத்திலும் பார்க்கக்கூடுதலான ரூ. 17 இலட்சங்கொண்ட நட்டத்தினை அடைந்தது.

(ஈ) இலங்கைக் கனிப்பொருள் கூட்டுத்தாபனம்

1968/69இல் ரூ. 148 இலட்சமாக இருந்த மொத்த மூலதன முதலீடு, 1969/70இல் ரூ. 150இலட்சமாக அமைந்தது. 1968/69ஆம் ஆண்டு 75,986 தொன்களாக இருந்த இல்மனைற்று உற்பத்தி, 1969/70இல் 77,356 தொன்களாக அதிகரித்ததோடு, இல்மனைற்றின் ஏற்றுமதிகள் 1968/69இல் 73,430 தொன்களாக இருந்து, 1969/70இல் 81,482 தொன்களாக அதிகரித்தது; வெளிநாட்டுச் செலாவணி வருமானங்கள் ரூ. 33.9 இலட்சத்திலிருந்து ரூ. 40.9 இலட்சமாக அதிகரித்தது.

கூட்டுத்தாபனம் 1968/69இல் உற்பத்திசெய்த 1967 தொன்கள் றூட்டைலுக்கு எதிராக 1969/70இல் 1,549 தொன்கள் றூட்டைல் உற்பத்தி நடைபெற்றிருந்தும், 1968/69இல் ஒரு றூட்டைலையும் ஏற்றுமதி செய்திராத கூட்டுத்தாபனம் 1969/70இல் 2,830 தொன் றூட்டைலை ஏற்றுமதி செய்தது. கூட்டுத்தாபனம் எதிர்பார்த்தபடி 1970 செத்தெம்பர் வரையில் சிர்கொன் உற்பத்தியிலீடுபடவில்லை. கூட்டுத்தாபனத்திற்கு இல்மனைற்றின் உயர்ந்த உற்பத்தி, மொத்த விற்பனையினாலும் உயர்ந்த விலைகளினாலான றூட்டையிலின் விற்பனையினாலும் 1968/69இல் ரூ. 11 இலட்சமாக இருந்த இலாபத்தினை 1969/70 இல் ரூ 22 இலட்சமாக அதிகரிக்கக்கூடியதாக இருந்தது.

(எ) அடிப்படை லோகக் கைத்தொழில்கள்

(அ) இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம்

கடந்த சில ஆண்டுகளாக இக்கூட்டுத்தாபனத்தின் மூலதன முதலீடானது ரூ. 1,170 இலட்சமாகவே இருந்துவருகின்றது. 1968/69 காலப்பகுதியில் உருட்டிய பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பினைக் காட்ட 1969/70இல் இவ்வுற்பத்தி வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது.

கம்பிப் பொருட்களின் வெளியீட்டளவு 1968/69இல் உயர்ச்சியினைக் காட்டியிருக்க, 1969/70இல் முக்கியமாக தொழிலாளர்களது நீடித்த அமைதியின்மையினால், எல்லை வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. எப்படியிருந்தும், உருட்டிய பகுதிகள், கம்பி உற்பத்திகள் என்பவற்றின் விற்பனைகள் 1969/70இல் அதிகரிப்பினையே பதிவுசெய்தது. ஆண்டொன்றுக்கு 60,000 தொன்களையும் 12,000 தொன்களையும் முறையேகொண்ட தொழிற்றிறனைக் கொண்ட உருக்குத் தொழிற்சாலையும், கம்பித் தொழிற்சாலையும் தொடர்ந்து தமது தொழிற்றிறனுக்கு குறைவாகவே தொழிலாற்றிவந்தன.

1969/70இல் கூட்டுத்தாபனம் இலாபத்தினைச் சென்ற ஆண்டின் மட்டத்திலேயே தொடர்ந்தும் பாதுகாக்கமுடிந்ததோடு, ரூ.26 இலட்சத்தினை இலாபமாகப் பெற்றது. 1969/70இல் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக நடவடிக்கைகளின் மீதான இலாப, நட்டப் புள்ளிவிவரங்கள் வெவ்வேறாகக் கிடைக்கவில்லை. ஆனால் சென்றாண்டில் வர்த்தகத்தொழிலின் மீது கூட்டுத்தாபனம் 2,30,000 ரூபா நட்டத்தினை அடைந்தது.

**(ஏ) தயாரிக்கப்பட்ட உலோகப் பொருட்கள் — எந்திரமும் சாதனமும்**

*(அ) இலங்கை உலோகப்பொருட் கூட்டுத்தாபனம்*

சென்ருண்டின் ரூ. 362 இலட்சமாக இருந்த கூட்டுத்தாபனத்தின் மூலதன முதலீடு 1969/70இல் ரூ.380 இலட்சமாக அதிகரித்தது. 1968/69இல் ரூ. 50 இலட்சமாகவிருந்த உற்பத்திப் பெறுமதி 1969/70இல் ரூ. 36 இலட்சமாக வீழ்ச்சியுற்றது. இந்த எதிர்மாருன நிலேயினுல் அதே காலப்பகுதியில் விற்பனேகள் ரூ. 31 இலட்சத்திலிருந்து ரூ. 49 இலட்சமாக அதிகரித்தது. கூட்டுத்தாபனத்தின் சென்ருண்டினது ரூ. 7 இலட்ச நட்டத்துடன் ஒப்பிடுமிடத்து, 1969/70இல் ரூ. 48 இலட்சம் நட்டத்தினேப் பதிவுசெய்தது.

1969 சனவரி தொடக்கம் செத்தெம்பர்வரை கூட்டுத்தாபனத்தினது மண்வெட்டிகளது வெளியீட்டளவு 64,100 ஆக இருக்க, 1970 அதே காலப் பகுதிகளில் மண்வெட்டிகளது வெளியீடு 33,700 ஆக இருந்தது. உற்பத்தியின் அதிகளவு வீழ்ச்சிக்கும், வேலேயின் வேகக் குறைவிற்கும், நாளொன்றுக்கு மண்வெட்டிகளது உற்பத்தி 800 இலிருந்து 200 ஆகக் குறைந்ததற்கும் தொழிலாளர் அமைதியின்மையே முக்கிய காரணியாகும். இருந்தபோதும் 1970இல் நடுப்பகுதியளவில் தொழிளாளர் பிரச்சினேகள் தீர்க்கப்பட்டபின், உற்பத்தி நாளொன்றுக்கு 1,000 ஆக அதிகரித்தது.

**(ஐ) கைத்தொழில்**

*(அ) இலங்கைக் கடற்ருெழில் கூட்டுத்தாபனம்*

1969/70ஆம் ஆண்டில் இக் கூட்டுத்தாபனத்தின் மொத்த முதலீடு 57 சதவீதத்தினுல் அல்லது ரூ.306 இலட்சத்தினுல் ரூ. 843 ஆக அதிகரித்தது. 1968/69இல் பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு 99 இலட்சம் இருத்தல்களாக இருக்க, 1969/70இல் இந்த அளவு 81 இலட்சம் இருத்தல்களாக வீழ்ச்சியடைந்தது. 1968/69இல் ரூ.88 இலட்சமாக இருந்த மொத்த விற்பனேகள் 1969/70இல் ரூ. 132 இலட்சமாக அதிகரித்தது. கடந்த சிலவாண்டுகளுக்குப் பெருமளவு நட்டத்தினே அடைந்துவரும் இக்கூட்டுத்தாபனத்தின் 1969/70ஆம் ஆண்டின் நட்டம் இதுவரை மதிப்பிடப்படவில்லே.

கூட்டுத்தாபனம் நண்டு வகை உட்படப் பல்வகை மீன்களேயும், மலேசியா, சிங்கப்பூர், கொங்கொங், யப்பான் ஆகிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றது. 1968/69இல் மொத்தமாக 8,71,800 இருத்தல் ஏற்றுமதி செய்து, அதனுல் 8,24,000 ரூபா வெளிநாட்டுச் செலவாணியினேப் பெற்றுக்கொண்டது. 1969/70இல் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த அளவு 7,75,700 இருத்தல்களாகவும், அதனுல் பெற்ற வருமானம் ரூ. 7,31,400 ஆகவும் இருந்தது.

**(ஒ) கட்டடவாக்கம்**

*(அ) அரசாங்கப் பொறியியற் கூட்டுத்தாபனம்*

1968/69 ஆம் ஆண்டுகளில் ரூ. 266 இலட்சமாக விருந்த மொத்த மூலதன முதலீடு 1969/70ல் ரூ. 333 இலட்சமாக அதிகரித்தது. 1969/70இல் இக் கூட்டுத்தாபனத்தினுல் ரூ. 597 இலட்சம் பெறுமதியான ஒப்பந்தங்கள் கைபேற்கப்பட்டதுடன், ஆண்டின் முடிவில் வெளிநின்ற ஒப்பந்தங்களின் தொகை ரூ. 1,619 இலட்சமாகும். 1968/69இலிருந்த ரூ. 81 இலட்சம் இலாபத்துக்கு எதிராக 1969/70இல் கூட்டுத்தாபனத்தின் இலாபம் ரூ. 87 இலட்சமாக அமைந்தது. இருந்தபோதும், 1968/69இல் ரூ. 27 இலட்சமாக இருந்த கூட்டுத்தாபனத்தின் இலாபம் ரூ 6 இலட்சமாக மிகக் கூர்மையாக வீழ்ச்சியடைந்தது.

## அட்டவணை II (இ) 6

### அரசாங்கப் பொறியியற் கூட்டுத்தாபனம் [அ] [ஆ]

| | | 1965–66 | 1966–67 | 1967–68 | 1968–69 | 1969–70 |
|---|---|---|---|---|---|---|
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம் ... | ரூ.'000 | 3,270 | 19,655 | 29,330 | 26,588 | 33,299 |
| 2. சொத்துக்களின் பெறுமதி ... | ரூ.'000 | 56,620 | 79,100 | 95,250 | 30,646 | 38,732 |
| 3. வெளியீடு ... | ரூ.'000 | | | | | |
| i. இவ்வாண்டிலெடுக்கப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதி ... | | 22,900 | 140,200 | 46,685 | 95,346 | 59,703 |
| ii. இவ்வாண்டில் வழங்கிய ஆலோசனைகளினதும் ஏனைய பணிகளினதும் பெறுமதி ... | | 150 | 160 | 210 | 72 | — |
| iii. இவ்வாண்டினிறுதியில் வெளிநின்ற ஒப்பந்தங்களின் பெறுமதி ... | | 61,449 | 179,500 | 198,500 | 96,077 | 161,855 |
| 4. வருமானம் ... | ரூ.'000 | 24,376 | 20,540 | 36,108 | 8,118 | 8,701 |
| i. நிர்மாணமும் ஆலோசனையும் .. | | 24,369 | 20,527 | 36,082 | 6,265 | 7,466 |
| ii. ஏனையவை .. | | 7 | 13 | 26 | 1,853 | 1,235 |
| 5. செலவு ... | ரூ.'000 | 20,372 | 26,600 | 32,000 | 5,425 | 5,621 |
| 6. இலாபம் (+) நட்டம் (—) ... | ரூ.'000 | –1,096† | –891† | –3,700† | + 2,693 | +610 |
| 7. தொழில் நிலை... | எ.தொ. | 5,612 | 6,548 | 11,616 | 12,123 | 15,533 |
| i. தொழில் ... | | 4,998 | 5,444 | 10,116 | 10,927 | 13,610 |
| ii. ஏனையவை... | | 614 | 1,104 | 1,500 | 1,196 | 1,923 |

மூலம்: அரசாங்கப் பொறியியற் கூட்டுத்தாபனத்திஞற் கொடுக்கப்பட்ட தரவுகள்.

அ. 1960–70 உக்கான எண் தொகைகள் தற்காலிகமானவை.

ஆ. ஏப்பிறல்—மாச்சு கணக்காண்டுகளுக்கு உரியவை.

இ. ஆண்டினிறுதியில் மொத்தம்.

ஈ. வரிவிதிப்பதற்கு முன்பு.

† கணக்கு ஆய்வாளர் அதிபரின் அறிக்கையினை அடிப்படையாகக்கொண்டு திருத்தப்பட்ட எண்தொகைகள்.

## 3. விவசாயத் துறை

### (அ) இலங்கை அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

1968/69 காலப் பகுதிகளில் இலங்கை அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் பதினைந்து தோட்டங்களையும், நாலு தொழிற்சாலைகளையும் நடாத்தி வந்தது.

1965/66ஆம் ஆண்டில் ரூ. 335 இலட்சமாக இருந்த கூட்டுத்தாபனத்தின் மொத்த முதலீடானது 1966/67இல் ரூ. 392 இலட்சமாக அதிகரித்தது. 1967/68இல் ரூ. 320 இலட்சமாக வீழ்ச்சியடைந்த இம்முதலீடு திரும்பவும் 1968/69இல் ரூ 363 இலட்சமாக அதிகரித்தது. 1969/70இல் பெருந்தோட்டங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின்மீது செய்யப்பட்ட மூலதன முதலீடு முறையே ரூ. 363 இலட்சம், ரூ. 317 இலட்சமாக அமைந்தது.

இக்கூட்டுத்தாபனத்தின் இறப்பர், தெங்கு, கொக்கோத் தோட்டங்கள் ஓரளவு உற்பத்திப் பொருட்களின் விலைகள் திருப்திகரமான மட்டத்திற் பாதுகாக்கப்பட்டதனுல் இலாபத்தினைப் பெற்றன. கூட்டுத்தாபனத்தின் பெறுபேறுகளைப் பொறுத்தளவில், ஓரளவு விலைகள் வீழ்ச்சியடைந்தமையால் பொதுவாகத் திருப்தியற்ற தன்மையே காணப்பட்டது. பெலவத்தையிலுள்ள தோட்டம் ரூ 127,782 நட்டத்தினை அடைந்தது. தொழிலாளர் குறைவினுலும், குறைந்தளவு உற்பத்தியினுலும், தேயிலைகளின் குறைந்த விலைகளினுலும், 3 எந்திரங்களில் 2 எந்திரங்கள் பழுதடைந்தமையினுலும் பெலவத்தையிலுள்ள தொழிற்சாலை 9 மாதங்கள் வரை இயக்கத்திலில்லாததனுல் இந்

நட்டம் ஏற்பட்டது. யகலதென்ன/டிப்பிற்றியா என்பன ஏழை விவசாயி களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்காகக் காணி ஆணையாளரிடம் கையளித்தது வரை கூட்டுத்தாபனத்தினுல் நடாத்தப்பட்டது.

**அட்டவணை II (இ) 7**

**அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்** (அ)

| விடயங்கள் | 1965-66 | 1966-67 | 1967-68 | 1968-69 | 1969-70 |
|---|---|---|---|---|---|
| **1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (ரூ.'000)** | 33,542 | 39,185 | 32,000 | 36,257 | 38,713 |
| பெருந்தோட்டங்களின் ... ... | 28,378 | 34,000 | 25,000 | 29,238 | 31,683 |
| தொழிற்சாலையில் ... ... | 5,164 | 5,185 | 7,000 | 7,029 | 7,030 |
| **2. பெருந்தோட்டங்கள்** | | | | | |
| எண்தொகை ... ... ... | 12 | 12 | 15 | 15 | 14 |
| ஏக்கர் தொகை ... ... ... | 8,654 | 8,654 | 14,734 | 14,249 | 13,691 |
| ஏக்கருக்கு நடப்பட்ட ... ... | 5,565 | 5,513 | 6,719 | 9,698 | 9,978 |
| வருமானம் (ரூ. '000) ... ... | 1,841 | 3,193 | 5,184 | 4,744 | 4,596 |
| இலாபம் (+) அல்லது நட்டம் (—) (ரூ. '000) ... | + 111 | — 350 | + 725 | + 11 | — 16 |
| வேலை நிலை ... ... ... | 6,631 | 6,441 | 8,594 | 7,389 | 6,601 |
| **3. தொழிற்சாலைகள்** | | | | | |
| எண் தொகைகள் ... ... | 3 | 3 | 4 | 4 | 4 |
| வருமானம் (ரூ. '000) ... ... | 2,107 | 1,458 | 1,125 | 4,175 | 3,080 |
| இலாபம் (+) அல்லது நட்டம் (—) ... | — 33 | — 134 | — 77 | — 109 | — 145 |
| வேலை நிலை ... ... ... | 215 | 192 | 356 | 351 | 262 |
| **4. மொத்தக் கூட்டுத்தாபனம் ...** .. | 3,948 | 4,651 | 6,309 | 8,919 | 7,677 |
| மொத்த வருமானம் ... ... | | | | | |
| இலாபம் (+) அல்லது (—) நட்டம் ... | + 86† | + 16† | + 295† | — 97 | — 161 |
| வேலை நிலை ... ... ... | 6,846 | 6,633 | 8,950 | 7,740 | 6,863 |

மூலம்: அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்.

அ. ஒற்ருேபர் தொடக்கம் செத்தெம்பர் வரை கணக்காண்டுகளுக்குரிய எண் தொகைகளாகும். 1969/70 எண் தொகைகள் தற்காலிகமானவை.

ஆ. கணக்காண்டின் இறுதியிலுள்ளவாறு மொத்தம்.

இ. வரிக்கு முன் இலாபம்.

† கணக்காய்வு அதிபரின் அறிக்கையினை அடிப்படையாகக்கொண்டு திருத்தப்பட்ட எண்தொகைகள்.

## 4. பணித்துறை

அரசாங்கத் தொழில் முயற்சியில் பணித் துறையானது கூட்டுத்தாப னங்கள், சபைகள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கும். 1968/69ஆம் ஆண்டில் ரூ. 28,300 இலட்சமாக இருந்த இக் கூட்டுத்தாபனங்கள், இலங்கை அரசாங்கப் புகைவண்டிச் சேவை (ஏனைய அரசாங்கத் திணைக்களங்கள் தவிர்த்து) ஆகியவற்றின் மொத்த முதலீடு 1969/70இல் ரூ. 28,300 இலட்சமாக 7.4 சதவீத அதிகரிப்பினைக் காட்டி யது. 1969/70இல் மொத்தத் தொழில்நிலை 1,44,336 இலிருந்து 1,50,645 ஆக அதிகரித்தது.

1968/69இல் மொத்த முதலீடானது ரூ. 16,156 இலட்சமாக இருக்க, 1969/70இல் இத்தொகை ரூ. 17,311 இலட்சமாக அமைந்தது.

**(அ) மின்சாரம், வாயு, நீர்**

*(அ) இலங்கை மின்சாரச் சபை*

1969, நவெம்பரில் நிறுவப்பட்ட இலங்கை மின்சாரச் சபையின் நட வடிக்கைகள் முற்றுக நடைபெற்ற ஆண்டு 1970ஆம் ஆண்டாகும். சபை

யினது நிதியாண்டு 1970.12.31இல் முடிவடைந்ததாலும், 1969 நவெம்பர் முதல் தேதியிலிருந்து, 1970 ஒற்றோபர் 31ஆந் திகதிவரை மட்டுமே தரவுகள் பெறக்கூடியதாயிருந்தது.

அட்டவணை II (இ) 8

| | | 1965–66 | 1966–67 | 1967–68 | 1968–69 | 1969–70 |
|---|---|---|---|---|---|---|
| 1. இலங்கை மின்சார சபை (அ) | | | | | | |
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம்(ஆ) | ரூ. '000 | 525,600 | 579,400 | 649,800 | 741,900 | 784,000 |
| 2. இயலளவு ... ... | கி. வா. | | | | | |
| i. நிறுவப்பட்ட இயலளவு ... | | 195.0 | 181.0 | 181.0 | 262.0 | 262.0 |
| (அ) நீர் மின்சக்தி ... ... | | 110.0 | 111.0 | 111.0 | 192.0 | 192.0 |
| (ஆ) வெப்ப மின்சக்தி ... | | 85.0 | 70.0 | 70.0 | 70.0 | 70.0 |
| ii. பயனுடைய இயலளவு ... | | 154.0 | 154.3 | 168.5 | 222.5 | வி. கி. |
| 3. உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்பட்ட சக்தி (ப. இ. கி. வா.) | ப.இ.கி.வா. | | | | | |
| i. உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | | 477.6 | 560.8 | 594.4 | 708.3 | 772.0 |
| ii. கிடைக்கக்கூடிய அலகுகள் (இ) ... | | 468.9 | 547.3 | 581.4 | 696.1 | 767.0 |
| iii. அனுப்புதலில் இழக்கப்பட்ட அலகுகள் ... | | 61.4 | 75.5 | 70.4 | 122.3 | 119.0 |
| iv. விற்கப்பட்ட அலகுகள் ... | | 407.5 | 471.7 | 511.0 | 573.0 | 648.0 |
| 4. மின்சார விற்பனை (ப. இ. கி. வா.) ... | ப.இ.கி. வா. | 407.5 | 471.8 | 511.1 | 573.7 | 648.0 |
| i. உள்நாட்டு ... | | 45.2 | 27.9 | 53.2 | 57.0 | 60.0 |
| ii. வர்த்தக ... ... | | 67.5 | 71.8 | 77.8 | 77.6 | 85.0 |
| iii. கைத்தொழில் .. | | 162.4 | 224.5 | 250.5 | 284.9 | 329.0 |
| iv. உள்ளூர் அதிகாரச் சபை ... | | 106.9 | 123.1 | 121.8 | 143.9 | 161.0 |
| v. ஏனையவை (ஈ) ... ... | | 25.5 | 4.5 | 7.8 | 10.3 | 13.0 |
| 5. மொத்த வருமானம் ... ... | ரூ.1000 | 58.300 | 64,900 | 73,200 | 81.800 | 95,940 |
| i. மின்சார விற்பனைகள் ... | | 53,700 | 61,600 | 69,800 | 76,000 | 92,700 |
| ii. ஏனையவை ... .. | | 4,600 | 3,300 | 3,400 | 5,800 | 3,240 |
| 6. பொறித் தொகுதி பயன்படுத்தற் காரணி (உ) | சத வீதம் | 28.1 | 35.3 | 39.4 | 30.3 | 33.7 |
| 7. மொத்தச் செலவு இவற்றில் | ரூ. 1000 | 44,300 | 53,100 | 64,100 | 72,200 | வி. கி. |
| i. உற்பத்தி ... ... | | 4,700 | 6,400 | 10,300 | 12,200 | வி. கி. |
| ii. அனுப்புதல் .. ... | | 2,700 | 3,000 | 3,300 | 3,900 | வி. கி. |
| iii. விநியோகம் ... ... | | 3,200 | 3,400 | 3,500 | 4,600 | வி. கி. |
| iv. மேலதிகச் செலவுகள் (ஊ) ... | | 6,300 | 6,800 | 8,500 | 10,900 | வி. கி. |
| v. வட்டியும் ஆண்டுத் தொகைகளும் | | 27,400 | 33,500 | 38,500 | 40,800 | வி. கி. |
| 8. இலாபம்(+)அல்லது நட்டம் (—) (எ) | ரூ. 1000 | +7,565† | +8,954 | +8,548† | +9,200 | வி. கி. |
| 9. தொழில் நிலை (ஏ) ... ... | எ. தொகை. | 5,630 | 5,690† | 5,869 | 5,871 | 7,650 |

மூலம்: சபையினால் அளிக்கப்பட்ட தரவு.

அ. ஒற்றோபர் தொடக்கம் செத்தெம்பர் வரை கணக்காண்டுக்குரியவை. 1969/70 ஆம் ஆண்டிலிருந்து எண்தொகைகள் தற்காலிகமானவை.
ஆ. ஆண்டிறுதியிலுள்ளபடியான மொத்தம்.
இ. நிலையங்களிற் பயன்படுத்தப்பட்ட அலகுகள் தவிர்ந்த உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள்.
ஈ. பொது இடங்களுக்கான மின்சாரம், கல்லோயா அபிவிருத்திச்சபை ஆகியவற்றை உள்ளடக்கும்.
உ. பொறித் தொகுதிப் பாவனையின் சராசரி உபயோகம்.
ஊ. தலைமையலுவலகம் போன்றவை.
எ. வரி விதிப்பதற்கு முன்.
ஏ. ஆண்டிறுதியிலுள்ளபடி
† கணக்காய்வு அதிபரின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்ட எண்தொகைகள்.

1968/69இல் ரூ. 7,419 இலட்சமாக இருந்த மூலதன முதலீடு 1969/70 இல் ரூ. 7840 இலட்சமாக அதிகரித்தது. 1968/69ஆம் ஆண்டின் மொத்தச் செலவீடு 1967/68இன் ரூ. 641 இலட்சத்துக்கு எதிராக ரூ. 722 இலட்

*சமாக அமைந்திருக்க, 1968/69ஆம் ஆண்டின் மொத்த வருமானம் 1967/68 ஆம் ஆண்டின் ரூ. 732 இலட்சத்துக்கு எதிராக ரூ. 818 இலட்சமாக அமைந்தது. 1967/68இல் ரூ. 85 இலட்சமாக இருந்த இலாபம் 1968/69இல் ரூ. 92 இலட்சமாக அமைந்தது.*

*(ஆ) நீர் வளச்சபை*

*திட்டவமைப்பு, தொழில்நிலைத் திணைக்களத்தின்கீழ் ஓர் ஆலோசகராக விளங்கும் நீர் வளச்சபை தொடர்பான தரவுகள் கீழே அட்டவணை 11 (இ) 9 இற்றரப்பட்டுள்ளன.*

**அட்டவணை** 11 (இ) 9

| நீர்வளச் சபை (அ) | 1966–67 | 1967–68 | 1968–69 | 1969–70 | 1970–71 |
|---|---|---|---|---|---|
| 1. மூலதன வரவுகள் (ஆ) ரூ. 000 | 245 | 76 | 300 | 300 | 300 |
| 2. வருமானம் ,, | 245 | 76 | 335 | 370 | 370 |
| 3. செலவு ,, | 165 | 240 | 274 | 370 | 370 |
| 4. மிகை(+)அல்லது குறை (—) (இ) ,, | +135 | —165 | +64 | — | — |
| 5. தொழில் நிலை (ஈ) (எண்தொகை) | 15 | 20 | 28 | 28 | 28 |

மூலம்: சபையினால் அளிக்கப்பட்ட தரவு

(அ) ஒற்றோபர் தொடக்கம் செத்தெம்பர் வரை கணக்காண்டுக்குரியவை. 1969–70 ஆம் ஆண்டிலிருந்து எண்தொகைகள் தற்காலிகமானவை.
(ஆ) நன்கொடைகளாக
(இ) செலவு கழித்த வருமானம்
(ஈ) ஆண்டுமுடிவிலான.

## (ஆ) போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்புகள்

*(அ) இலங்கை அரசாங்கப் புகைவண்டிச் சேவை*

*1968/69ஆம் நிதியாண்டின் முடிவில் ரூ. 6,657 இலட்சமாக இருந்த மொத்த மூலதனம், 1969/70ஆம் ஆண்டின் முடிவில் ஏறக்குறைய ரூ. 300 இலட்சத்தினால் ரூ. 6,960 இலட்சமாக அதிகரித்துள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.*

*சென்ற ஆண்டின் 40 இலட்சம் அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து 1969/70 ஆம் ஆண்டில் பிரயாணஞ் செய்தோரின் தொகை 15 இலட்சத்தினால் அதிகரித்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. 1968/69ஆம் ஆண்டிலும் பார்க்க 1969/70ஆம் ஆண்டு பயண மைல்களின் அளவு கூடிய அதிகரிப்பினைக் காட்ட, பயணத்தர்களிடமிருந்து பெற்ற வருமானம் 1969/70இல் ரூ. 570 இலட்சத்திலிருந்து ரூ. 605 இலட்சமாக அதிகரித்தது. இவ்வதிகரிப்பு சென்றாண்டிலும் பார்க்கக் குறைவான அதிகரிப்பாகும்.*

*கற்பாதைப் போக்குவரத்தில் போட்டியிருந்தும், புகைவண்டி மூலமாக எடுத்துச்செல்லப்பட்ட பொருட்களின் அளவு 2 இலட்சம் தொன்கள்கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது. சென்றாண்டின் 15 இலட்சம் தொன்கள் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து இவ்வாண்டின் பொருட்களின் தொன் – மைல்களின் அளவு 50 இலட்சம் அதிகரிப்பினைக் காட்டுகின்றது. பொருட்களின் போக்குவரவுகளினால் ஏற்பட்ட மொத்த வருமானம் அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.*

*புகைவண்டிப் பகுதியின் மொத்த மதிப்பீட்டு வருமானம் சென்றாண்டிலும் பார்க்கக் கூடுதலாக, 74 இலட்சம் ரூபா அதிகரிப்பினைக் காட்ட, மொத்தச் செலவு ரூ. 50 இலட்சத்தினால் அதிகரித்தது. புகைவண்டிப் பகுதி*

யின் மொத்த வருமானம் கூடியளவு அதிகரித்தமையால், அது தனது மொத்த நட்டத்தினை ரூ. 23 இலட்சத்தினுல், ரூ. 551 இலட்சமாகக் குறைத்துக் கொள்ளக்கூடியதாயிருந்தது. 1965/66ஆம் ஆண்டில் ரூ. 503 இலட்சத்திலிருந்து, 1966/67இல் ரூ. 462 இலட்சமாகத் தளம்பிக்கொண்டிருந்த புகைவண்டிச் சேவையின் மொத்த நட்டமான 1968/69இல் ரூ. 574 இலட்ச உச்சத்தினை அடைந்தது.

(ஆ) இலங்கைப் போக்குவரத்துச் சபை

அட்டவணை II (இ) 10ஆனது 1969/70ஆம் ஆண்டில் முடிந்த நான்கு ஆண்டு காலப் பகுதிகளில் சபையினது நடவடிக்கைகளது சில சிறப்பான தோற்றங்களையும், 1970/71இன் மதிப்பீடுகளையும் காட்டுகின்றது.

1969/70இல் சபையினுல் செய்யப்பட்ட மொத்த மூலதன முதலீடு ரூ. 480 இலட்சத்தினுல் ரூ 3,154 இலட்சமாக அதிகரித்தது. இவற்றுள் ரூ. 2,518 இலட்சம் ஊர்திகளிலும், மிகுதி ரூ 636 இலட்சம் ஊர்திக் கொட்டகைகள், ஊர்திகள் உறைவிடம், பாதுகாப்பு நிலையங்கள் ஆகியவற்றிலும் முதலீடு செய்யப்பட்டது.

1969/70ஆம் ஆண்டுகளில் சபையின் உடைமையிலிருந்த ஊர்திகளின் தொகை 445இனுல் 6,326ஆக அதிகரித்தது. ஓட்டத்திலிருந்த பேருந்துகளின் தொகை 1,066இனுலும். ஓட்டக்கூடிய நிலையிலிருந்த பேருந்துகளின் தொகை 599 இனுலும் அதிகரித்தது.

1969/70ஆம் ஆண்டில் அட்டவணையிற் குறிப்பிடப்பட்ட மைல்களின் அளவு 196 இலட்சம் மைல்களால் அதிகரித்திருக்க, இயங்கிய மைல்களின் அளவு 164 இலட்சம் மைல்களால் அதிகரித்தது. இதில் இழந்த மைல்களின் அளவு வண்டிகள் பழுதடைந்தமையினுலும், தேவையான நேரத்தில் போதுமான அளவு பேருந்துகள் கிடைக்காமையினுலும் 103 இலட்சம் மைல்களினுல் 428 இலட்சம் மைல்களாக அதிகரித்தது. 1968/69இல் 19 இலட்சம் மைல்களாகவிருந்த காலியாக ஓட்டப்பட்ட மைல்களின் அளவு, 1969/70இல் 15 இலட்சம் மைல்களாகக் குறைக்கப்பட்டது.

கடந்த சிலவாண்டுகளுக்கும் மேலாக தளராது அதிகரித்துக்கொண்டு வந்த பிரயாணம் செய்த பயணிகளின் தொகை 1969/70இல் 13,567 இலட்சமாக அதிகரித்தது. 1969/70இல் மொத்த இருப்பிட மைல்கள் 6,902 இலட்சத்தினுல் அதிகரித்திருக்க, மொத்த பயணத்தர் மைல்கள் 2,379 இலட்சத்தினுல் அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு 1968/69இல் 61.5 சதவீதமாக இருந்த பாரக் காரணி (பயணத்தர் மைல்களிலிருந்து ஆசனத் திறன் மைல்களுக்கான விகிதம்) 1969/70இல் 60 சதவீதமாக வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். சராசரி ஊர்திகளின் உபயோகமானது, ஒரு நாளின் ஒரு பேருந்தினுல் இயக்கப்பட்ட மைல்களின் அளவினைப் பிரதிபலிக்கின்றது. 1966/67இலிருந்து 1968/69 வரையான காலப்பகுதிகளில் ஒரே மட்டத்திலிருந்த ஒருநாளின் இயக்கப்பட்ட மைல்களின் அளவு 1969/70இல் 157 இலிருந்து 154 மைல்களாக வீழ்ச்சியடைந்தது.

சென்ற ஆண்டுகளில் சபையினது தொழில்நிலையானது விரைவாக அதிகரித்து வந்தது. 1966/67இல் வேலையாட்கள் 32,165 ஆகவும், 1968/69இல் இத்தொகை 40,097 ஆகவும் இருந்தது. 1969/70இல் தொழில்நிலை 1,328 இனுல் 41,425 ஆக அதிகரித்தது. இயக்கப்பட்ட பேருந்துகளின் அட்டவணையிடப்பட்டதும், இயக்கப்பட்டதுமான மைல்களின் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க, வேலை நிலையிலேற்பட்ட அதிகரிப்பானது கூடுதலாக இருந்தது. 1966/67இல் சராசரி ஒரு பேருந்துக்கு 8.2 ஆக இருந்த ஊழியர்கள் 1969/70இல் 9.0 ஆகக் காணப்பட்டனர்.

1969/70இல் சபையினது வருமானம் ரூ. 83 இலட்சத்தினல், ரூ. 2,878 இலட்சமாகவும், செலவு ரூ. 299 இலட்சத்தினல் ரூ. 3,221 இலட்சமாகவும் அதிகரித்தன. 1969/70ஆம் ஆண்டில் வருமான அதிகரிப்பினைச் செலவிலேற் பட்ட கூடிய அதிகரிப்பு எதிரீடு செய்து 1967/68ஆம் ஆண்டின் ரூ. 72 இலட் சம், 1968/69இன் ரூ. 132 இலட்சம்கொண்ட நட்டங்களுக்கு எதிராக ரூ. 342 இலட்சம் நட்டத்தினையடைந்தது.

(இ) வரையறுக்கப்பட்ட விமான சேவை

1968/69ஆம் ஆண்டு ரூ. 3,19,60,000 ஆக இருந்த சொத்துக்களின் பெறுமதி, 1969/70இல் ரூ. 2,97,15,000 ஆக வீழ்ச்சியடைந்தது.

1968/69இல் விமான சேவையினல் எடுத்துச்செல்லப்பட்ட பயணத்தர்கள் தொகை 2,214 இனலும், எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களின் தொன் னளவு 27 தொன்களினலும், பயணத்தர் மைல்கள் 958 இனலும் வீழ்ச்சி யடைந்தன. உள்நாட்டுச் சேவைகளில் பாரக் காரணி அதிகரிப்பினைக்காட்ட 1968/69இல் மொத்த வருமானம் இலாபத்தினைப் பெறும் என எதிர்பார்க் கப்பட்டது. 1968/69ஆம் ஆண்டின் மதிப்பீடுகளின்படி மொத்தச் செல வானது அதிகரித்திருந்தாலும், இறுதி விளைவுகள் இலாபத்தில் வீழ்ச்சியினைக் காட்டியது. 1969/70 காலப் பகுதிகளில் பன்னட்டுப் பணி, உள்நாட்டுப் பணி ஆகிய இரண்டிலும் மெச்சத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டதனல், பயணி களினதும் எடுத்துச்செல்லப்பட்ட பொருட்களினதும் மதிப்பீட்டளவுகள் அதி கரிப்பைக் காட்டின. இருந்தபோதும் இவ்வதிகரிப்பு, விமான ஓட்டங்களின் அதிகரிப்பினல் கிடைக்கப்பெற்ற அதிகரித்த செய்திறனுக்கு விகிதாசாரமாக அமையவில்லை.

1969/70ஆம் ஆண்டின் மதிப்பீடுகளின்படி 1968/69இல் ரூ. 1,05,65,000 ஆகவிருந்த மொத்த வருமானம் 1969/70இல் ரூ. 1,97,61,000 ஆக அதிகரித் தது. விமான உபகரணங்களின் / துணைக்கருவிகளின் இறக்குமதிமீது வெ. சா. உ. சா. செலுத்தவேண்டியேற்பட்டதனலும், 1969 செத்தெம்பரில் அறிமுகப் படுத்தப்பட்ட 'ரயிடன்ற்' ஜெட் விமானங்களது பராமரிப்புச் செலவும், இயக்கச் செலவும் அதிகரித்தமையினலும், கூலிச் செலவு அதிகரித்தமையா லும் விமானச் சேவையின் மொத்தச் செலவு குறிப்பிடத்தக்களவு அதிகரித் தது. வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினைச் செலவில் ஏற்பட்ட கூடிய அதிகரிப்பானது எதிரீடு செய்து, 1968/69ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட ரூ. 7,42,000 இலாபத்துக்கு எதிராக, 1969/70இல் ரூ. 55 இலட்சங்கொண்ட நட்டத்தினைப் பெற்றது.

(ஈ) கொழும்புத் துறைமுக ஆணைக் குழு

1955ஆம் ஆண்டின் சொத்துக்களின் மதிப்பீட்டு அடிப்படையில் 1970ல் துறைமுக ஆணைக்குழுவினற் செய்யப்பட்ட மதிப்பீட்டு மூலதன முதலீடு ரூ. 32,680 இலட்சமாகும். நடப்பாண்டிற்கான அபிவிருத்தி வேலைகள் ரூ. 3,488 இலட்சமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இம்முதலீட் டின் கணிசமான பகுதி கொழும்புத் துறைமுகத்திலிடப்பட்டது.

1966/67ஆம் ஆண்டில் இதன் வருமானம் சிறிது வீழ்ச்சியடைந்தாலும், 1967/68ஆம் ஆண்டுகளில் ரூ. 338 இலட்சத்திலிருந்து ரூ. 363 இலட்சமாக மெச்சத்தக்களவு அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 1968/69இல் தொடர்ந்தும் உயர்ந்த போக்கினைக் காட்டி 1969/70இல் ரூ. 443 இலட்சமாக அமைந்தது.

1969/70இல் வேலைச் செலவுகள் அதிகரித்துக் காணப்பட்டதுடன், 1970/71ஆம் ஆண்டுக்காலப் பகுதிகளிலும் இச்செலவுகள் மேலும் அதிகரிக்கு மென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வதிகரிப்பு, வெ.செ.உ.சா. திட்டத்தின லும், ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தினலும் உயர்ந்த செலவில் பொருட்கள் பெறப்பட்டு அதனல் பராமரிப்புச் செலவு அதிகரித்தமையாலும், திரட்டப்

| இலங்கை அரசாங்கப் புகைவண்டி (அ) | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70* |
|---|---|---|---|---|---|
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (ரூ. '000) ... | 592,900 | 614,300 | 639,132 | 665,679 | 696,000 |
| 2. பாதை மைல்களில் | 1,043 | 1,053 | 1,053 | 1,076 | 1,076 |
| 3. ஊர்திகள் (எண்ணிக்கை) | 8,204 | 8,067 | 7,353 | 7,484 | 7,484 |
| (அ) தொடர்வண்டி இயக்கும் பொறிகள் ... | 357 | 355 | 344 | 393 | 393 |
| (ஆ) வண்டிகள் | 7,847 | 7,712 | 7,009 | 7,091 | 7,091 |
| 4. நடைபெற்ற போக்குவரத்து .. | | | | | |
| (அ) பயணத்தர்கள் (ப. இ.) ஈ ... | 74.7 | 78.7 | 81.5 | 85.5 | 87.0 |
| (ஆ) பொருட்கள் (ப. இ. தொன்கள்) உ .. | 1.7 | 1.8 | 1.8 | 1.8 | 2.0 |
| 5. போக்குவரத்து மைல்கள் | | | | | |
| (அ) பயணத்தர் மைல்கள் (ப. இ. மைல்கள்) .. | 1536.9 | 1584.9 | 1678.3 | 1781.2 | 1900.0 |
